# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜா | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | மணி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 2.4.2024.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் வைகுந்தம் காளிப்பட்டி பிரிவு ரோட்டில் குடியிருக்கிறேன். நான் லாரி டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். நான், என் அம்மா, மனைவி 2 குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். பக்கத்து வீட்டில் இறந்துபோன சின்னசாமி குடியிருந்து வந்தார். அவர் டிவி.மெக்கானிக் தொழில் செய்து வந்தார். அவருக்கு 2 மகன்கள். அவர்கள் சந்திரசேகர் மற்றும் ரமேஷ். சந்திரசேகர் தறி ஓட்டி வருகிறார்.

ரமேஷ் கார் கம்பெனியில் சங்ககிரியில் வேலை செய்து வருகிறார். அவர்களின் குடும்பத்திற்குள் என்ன நடக்கிறது என்று தெரியாது. ஆஜர் எதிரிகளில் சந்திரசேகரை மட்டும் தெரியும். மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சின்னசாமி இறந்துபோனதற்கான காரணம் எனக்குத் தெரியாது. போலிசார் என்னிடம் விலாசம் மட்டும் கேட்டு வாங்கினார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையில் சின்னசாமியின் மகன் சந்திரசேகர் அவரது அப்பாவிடம் சொத்தை விற்று பணம் தரச்சொல்லி தகராறு செய்வார் என்றும் சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் சந்திரசேகர் அவரது மாமனார் வீட்டிற்கு மேட்டுருக்கு சென்றுவிட்டார் என்றும், சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் சின்னதம்பியின் வீட்டில் தங்கியிருந்தார் என்றும், 18.05.2018 ம் தேதி இரவு 10.00 மணி சுமாருக்கு சின்னசாமியின் இளைய மகன் ரமேஷ் சத்தம் போட்டபோது நானும் அக்கம் பக்கம் இருந்தவர்களும் போய் பார்த்தபோது சின்னசாமி வாய், மற்றும் கழுத்தில்

காயம்பட்டு ரத்தம் வந்து இறந்துகிடந்ததாகவும், அப்போது அங்கு வந்த பொன்னுசாமி எங்களிடம் மாலை 3.00 மணி சுமாருக்கு தென்னை மட்டை வெட்ட வந்த சமயத்தில் சந்திரசேகரும் அவருடன் 2 பேரும் வீட்டிற்கு ஒரே வண்டியில் வந்ததாகவும், ஒரே வண்டியில் 3 பேரும் சென்றதாகவும், அந்த சமயத்தில் வீட்டில் சத்தம் கேட்டதாக அவர் சொன்னார் என்றும், சந்திரசேகரும் அவருடன் வந்த 2 பேரும் சின்னசாமியை கழுத்தை நெறித்து கொன்றுவிட்டு பத்திரத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாக சொன்னார் என்று போலிசாரிடம் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.